**தலைப்பு 157 – தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 157 – தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 20 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 592.37 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 405.91 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 186.45 மில்லியன் அல்லது 31.48 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 287.07 | 260.68 | 26.39 | 9.19 |
| மூலதனம் | 305.30 | 145.23 | 160.07 | 52.43 |
| மொத்தம் | 592.37 | 405.91 | 186.46 | **31.48** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.00 | 0.49 | 0.50 | 1.41 | 60.00 | 23.91 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0362/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15.85 மில்லியன் கட்டுநிதி மீதி காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 38,698 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0002/0154/000 | 20,000 |
| 6000/0000/00/0013/0107/000 | 11,648 |
| 6000/0000/00/0018/0101/000 | 7,050 |
| மொத்தம் | **38,698** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 39,090,000 கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் பயன்படுத்தாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 44 செலவின விடயங்களிற்கு மிகை நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 235,320 ஆக இருந்ததுடன், அந்நிலுவை கடன் மீதிகள் 2 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்தது. அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டில் அமைச்சினால் வெளிநாட்டு நிதியளித்தல்களின் கீழ் ''சட்டத்தினை அமுலாக்குதல், நீதியான விதத்தில் சமத்துவ பங்குபற்றல் மற்றும் இலங்கையின் சமூக பிணைப்பினை பலப்படுத்துதல் மீதான செயற்திட்டம்'' நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட உடன்படிக்கையின் படி அதன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 47,197,492 ஆகக் காணப்பட்டதுடன், அச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 41,790,125 நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்**

சமூக பிணைப்பிற்கான மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய முகவர்கள் என்ற வகையில் ஆசிரியர்களை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,691,920 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 662,298 நிதி ஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் உள்ளடங்கியுள்ள சில விடயங்கள் கைவிடப்பட்டிருத்தல்.**

சமூக பிணைப்பினை மேம்படுத்துவதற்காக தொலைக்காட்சி நாடகமொன்றை தயாரிப்பதற்காக ரூபா 7,500,000 நிதி ஏற்பாடு 2013 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 500,000 மாத்திரம் கதையினை பிரதி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியினுள் பணிகளை முடித்திருக்காமை காரணமாக எஞ்சிய நிதி ஏற்பாடுகளை மீளளிக்கவேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.4 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டில் பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு வழிப்புணர்வூட்டும் 10 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 3,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 835,460 செலவிடப்பட்டு 04 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டிற்காக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த சுஹாரனி நிகழ்ச்சித்திட்டத்தினை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தொகுப்பதற்கும் செய்திக்கு முன்னரான விளம்பரத்தை தயாரிப்பதற்குமாக ரூபா 240,000 அரசாங்க கொள்வனவுகள் வழிகாட்டல் கையேட்டின் 1.2 ஆம் வழிகாட்டலை பின்பற்றாது, தெரிவுசெய்யப்பட்ட விளம்பர முகவவர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் வானொலி நிகழ்ச்சிகளை தொடர்புறுத்துதல் சம்பந்தமாக பெற்றுள்ள அனுபவங்கள் குறித்து உறுதிப்படுத்திக் கொள்ளாது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொண்டிருந்த கொடுக்கல் வாங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் மொழித் திட்டங்களை தயாரிக்கின்ற 2,500 வழிகாட்டல் கையேடுகள் மொழிகள் செயற்திட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து அச்சிட்டு வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் 1304 கையேடுகள் எஞ்சியிருக்கையில் மீண்டும் ரூபா 1,263,180 செலவிடப்பட்டு 2,000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தன. அப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தில் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்தன. 2015 திசெம்பர் 31 வரையிலும் 1030 புத்தகங்கள் எஞ்சியிருந்தன.

(ஆ) பண்டாரவலை பிரதேச செயலகத்தில் இரு மொழி நிவாரணக் கருமபீடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 125,587 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் மீண்டும் ரூபா 199,920 இரு மொழி நிவாரணக் கருமபீடத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

2012 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் ஓராண்டு காலத்திற்கு வெளிநாடு செல்வதற்காக சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றுக்கொண்டிருந்த தேசிய ஒருங்கிணைப்பு மேம்படுத்தல் உதவியாளர் ஒருவர் 2013 திசெம்பர் 02 ஆந் திகதி முதல் சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை. அதற்கமைய, வெளிநாட்டு விடுமுறைக்காக விண்ணப்பிக்கையில் கையொப்பமிட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம், அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 97,400 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 14 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 432 | 268 | 164 |
| (iv) | ஆரம்ப நிலை | 111 | 96 | 15 |
| | மொத்தம் | 571 | 381 | 190 |